**தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், காஞ்சிபுரம் மாவட்டம்**

**மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள்**

**தேர்வு செய்யப்படவுள்ளது குறித்த பத்திரிகை செய்தி**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் உள்ளாட்சி அமைப்பு நிறுவனங்கள் மற்றும் சமூக அடிப்படையிலான அமைப்புகளின் ஒருங்கிணைந்த செயல்பாட்டினை முழுமையாக்கும் திட்டப் பணியின் இரண்டாம் கட்ட செயல்பாடுகள் மேலும் 15 மாவட்டங்களில் விரிவுபடுத்தப்படவுள்ளது. இதற்கென மாநில மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்கள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

**காஞ்சிபுரம் மாவட்டத்திற்கான தற்காலிகப் பணியிடங்கள்**

| வ. எண் | பணி விவரம் | பணியிடங்கள் |
|---|---|---|
| 1. | மாநில வளப் பயிற்றுநர் | ஒன்று (மூன்று மாவட்டத்திற்கு ஒருவர் என பின்னர் தேர்வு செய்யப்படுவர்) |
| 2. | மாவட்ட வளப் பயிற்றுநர் | ஒன்று |
| 3. | வட்டார வளப் பயிற்றுநர் | 5 வட்டாரங்கள் (வட்டாரத்திற்கு ஒன்று வீதம்) |

**வள பயிற்றுநர்களுக்கான மதிப்பூதியம் மற்றும் பயணப்படி விவரம்**

| வ. எண் | வள நபர்களின் விவரம் | மதிப்பூதியம் | கண்காணிப்பு, மேற்பார்வை மற்றும் ஆவணப்படுத்துதல் | பயணப்படி நாளொன்றுக்கு | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 1. | மாநில வள பயிற்றுநர்கள் (SRP) | ரூ.1000/- அதிகபட்சம் 10 நாட்களுக்கு | ரூ.750/- அதிகபட்சம் 15 நாட்களுக்கு | ரூ.250/- 15 நாளுக்கு | ரூ.25,000/- அதிகபட்சமாக |
| 2. | மாவட்ட வள பயிற்றுநர்கள் (DRP) | ரூ.750/- அதிகபட்சம் 10 நாட்களுக்கு | ரூ.500/- அதிகபட்சம் 15 நாட்களுக்கு | ரூ.120/- 25 நாளுக்கு | ரூ.18,000/- அதிகபட்சமாக |
| 3. | வட்டார வள பயிற்றுநர்கள் (BRP) | ரூ.450/- அதிகபட்சம் 10 நாட்களுக்கு | ரூ.300/- அதிகபட்சம் 15 நாட்களுக்கு | ரூ.60/- 25 நாளுக்கு | ரூ.10,500/- அதிகபட்சமாக |

**மாநில வள பயிற்றுநர்**

1. பெண்கள் மற்றும் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை.
2. கல்வித்தகுதி : சமூக கல்வி / சமூக அறிவியல் /ஊரக வளர்ச்சி / பெண்கள் கல்வி அல்லது சமூக பணியிடங்களில் ஏதேனும் ஒரு முதுகலைப்பட்டம்.
3. வயது : 01.06.2026 அன்று 30-45 க்குள்
4. அனுபவம் : 10 ஆண்டுகள், சுயஉதவிக்குழு /கூட்டமைப்பில் பணியாற்றிய அனுபவம் /பயிற்றுநர் / சமூக பணி நிறுவனத்தில் பணியாற்றியது அல்லது அரசின் திட்டத்தில் ஊரக பணிகளில் பணியாற்றி இருத்தல்

<u>மாவட்ட வள பயிற்றுநர்</u>

1. பாலினம் : பெண்கள் (சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை )

2. வயது : 30–45 (1.6.2026 அன்றுள்ளபடி)

3. தகுதி : ஏதேனும் முழு நேரக்கல்வி முறையில் முதுகலை படிப்பில் ஒரு பட்டப்படிப்பு

4. அனுபவம் : 4 வருடங்கள்

<u>வட்டார வள பயிற்றுநர்</u>

1. பாலினம் : பெண்கள் (சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு முன்னுரிமை)

2. வயது: 25–45 (1.6.2026 அன்றுள்ளபடி)

3. கல்விதகுதி : ஏதேனும் முழு நேரக்கல்வி முறையில் ஒரு பட்டப்படிப்பு.

4. அனுபவம்: 3 வருடங்கள்.

மேலும் மாநில, மாவட்ட மற்றும் வட்டார வள பயிற்றுநர்களுக்கான கூடுதல் தகுதிகள் பின்வருமாறு:

1. மொழி : தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் எழுத, பேச தெரிந்திருத்தல்.

2. திறன் : தகவல் பரிமாற்றத்தில் தகுந்த திறன், ஒருங்கிணைப்பு, மனித உறவுகளை பேணுவதில் ஆற்றல், கைபேசி, செயலிகளை கையாள்வது, கணினியில் word, excel, இணைய பயன்படுத்துதலில் போதிய அறிவு பெற்றிருத்தல் அவசியம்.

இப்பதவிக்கான தகுதி மற்றும் விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட முகவரிக்கு தபால் மூலமாகவோ, நேரில் அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ விண்ணப்பங்களை 29.06.2026க்குள் விண்ணப்பம், தகுதி குறித்த சுய சான்றிட்ட நகல்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. இப்பணியிடங்களுக்கு எழுத்துத்தேர்வு, நேர்காணல் முறையில் தேர்வு செய்யப்படுவர். இப்பணியிடங்கள் இத்திட்டத்திற்க்கான 24 மாத காலவரையறை கொண்ட தற்காலிக பணியிடங்களாகும்.

திட்ட இயக்குநர்
மாவட்ட இயக்க மேலாண்மை அலகு,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
காஞ்சிபுரம் மாவட்டம் – 631 502
(or)
dpiu_kpm@yahoo.com

மேலும் விவரங்களுக்கு https://tncdw.org என்ற இணையதளத்தை அணுகலாம்.

15/6

மாவட்ட ஆட்சித்தலைவர்,
காஞ்சிபுரம் மாவட்டம்.

VB
13/6/26